**TAMIL NADU POLLUTION CONTROL BOARD**

**O/o. District Environmental Engineer**
**Tamilnadu Pollution Control Board**
**Maraimalai Nagar**

**Minutes of Public Hearing Conducted for Proposed Rough Stone and Gravel quarry of Thiru.K.Sundharamurthy at S.F. Nos. 88/1, 88/2A, and 88/4A over an extent of 1.63.98Ha (Mining area) and Block-II, S.F.No.75/6, 75/7, 75/8, 75/9, 85/1, 2 over an extent of 0.72.0 Ha (Area proposed only for stocking the mined material or dumping the waste/reject material or for parking vehicles or establishing mine office), Nelvaipalayam Village, Cheyyur Taluk, Chengalpattu District on 03.12.2024 at 11.00 AM at Jayanthi Mahal Koovathur, SH-49, East Coast Road, Nelvaipalayam Village, Cheyyur Taluk,Chengalpattu District**

**Details of the Project:**

| S. No | Name and location of the Proposed quarry | Extent in Ha |
|---|---|---|
| 1 | Thiru. Sundramoorthy for the proposed rough stone and Gravel Quarry, S.F. Nos. 88/1, 88/2A, and 88/4A (Mining area). | 1.63.98Ha |
| 2 | Block-II, S.F.No.75/6, 75/7, 75/8, 75/9, 85/1, 2 (Area proposed only for stocking the mined material or dumping the waste/reject material or for parking vehicles or establishing mine office) | 0.72.0 Ha |

**Venue:** M/s.Jayanthi Mahal Koovathur, SH-49, East Coast Road, Nelvaipalayam Village, Cheyyur Taluk,Chengalpattu District

**Date and Time:** 03/12/2023, 11.00 AM

**Present:**

| | | | |
|---|---|---|---|
| 1. | Tmt. S. Ramya | : | Revenue Divisional Officer, Madurantakam. |
| 2. | Thiru.G.Udhayakumar | : | District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Maraimalai Nagar, Chengalpattu District. |
| 3. | Thiru.R.Elangovan | | Assistant Director, Department of Geology and Mining. |
| 4. | Thiru.V.Saravanan | : | Tahsildar, Cheyyur |

| | | | |
|---|---|---|---|
| 5. | Thiru.G.Manivasagan | : | Assistant Engineer,<br>Tamil Nadu Pollution Control Board,<br>Maraimalai Nagar, Chengalpattu District. |
| 6. | Thiru.S.Balaji | : | Assistant Engineer,<br>Tamil Nadu Pollution Control Board,<br>Maraimalai Nagar, Chengalpattu District. |
| 7. | Thiru.K.Sivakumar | | Assistant Engineer,<br>Tamil Nadu Pollution Control Board,<br>Maraimalai Nagar, Chengalpattu District. |
| 8. | Public | : | 114 Persons **(Copy of Attendance is enclosed).** |

At the outset, the District Environment Engineer, Tamil Nadu Pollution Control Board, Maraimalainagar welcomed the Revenue Divisional Officer, Madurantakam, other Government Officials, Public, Social & Environmental activists for the Public Hearing and informed that the Proponent M/s Thiru. Sundramoorthy has approached the State Level Environmental Impact Assessment Authority-TN seeking Environmental Clearance for the proposed proposed rough stone and Gravel Quarry, at S.F. Nos. 88/1, 88/2A, and 88/4A over an extent of 1.63.98Ha (Mining area) and Block-II, S.F.No.75/6, 75/7, 75/8, 75/9, 85/1, 2 over an extent of 0.72.0 Ha (Area proposed only for stocking the mined material or dumping the waste/reject material or for parking vehicles or establishing mine office), Nelvaipalayam Village, Cheyyur Taluk, Chengalpattu District. In this regard, the SEIAA-TN in its letter dt.08.02.2024 has issued Terms of Reference (TOR) subject to one of the condition that the proponent shall prepare an EIA report and also to conduct a Public Hearing among than public in that area and address the concerns raised during the public hearing to SEIAA-TN. Based on that, the public hearing was arranged on 03.12.2024 and public notices have been issued as mandated in the news paper namely "Deccan Chronucle" (English) & "Daily Thanthi (Tamil)" on 29.10.2024.

Then the DEE, TNPCB informed that on behalf of project proponent, the Project Consultant will make power point presentation about the said proposed project and the public present can express their views, concerns and questions if any by indicating their name and village from where he /she comes from. It was also informed that the proceedings of the entire meeting will be recorded.

After that, the project consultant Thiru. M. Thangamani explained about the proposed project through a power point presentation before the public present during public hearing.

The views, concerns, questions and comments of the public and the clarification from the project proponent are detailed below.

| S. No | Name and Village | Comments and requests |
|---|---|---|
| 1 | Thiru. Renganathan, Presidnet, Vettaikaran Kuppam | I would like to speak here for a few minutes, expressing my first greetings to the Revenue Divisional Officer, the District Environmental Engineer, the Assistant Director of Mineral Resources, and all the villagers who have come to the public hearing meeting for the mine to be set up in Nelvaipalayam village. At the request of the Nelvaipalayam Panchayat President and my self, Mr. K. Sundaramoorthy came forward to set up this mine in Nelvaipalayam village. He has a job in Aakinampattu village, but the public hearing meeting is being held today because he agreed to set up this mine for the sole reason that Nelvaipalayam should generate income. I express my first greetings to him. The Nelvaipalayam Panchayat President did not come, he is unwell. I would like to inform you that 75 percent of the seigniorage fund will go to the Panchayat due to the establishment of this mine. It is also proposed to provide all the necessary facilities for employment and schools from the quarry fund. Similarly, he has already done a lot for the village and will continue to do so. With the coming of these mines, employment opportunities are being created directly and indirectly. Similarly, I wish that more and more mines will be established and Cheyyur Taluk achieves good progress. Thank you and greetings. |
| 2 | Thiru. Pandurangan, Nelvaipalayam village | Sir said that if this crusher comes, all the people will be fine, but if the crusher comes, everyone will die. There are already three crushers around the village, one is S.S. Crusher. The blast from this quarry reaches at least 1 1/2 km away. The smoke from that explosion is already affecting all the people. They are already suffering from wheezing |

| | | |
|---|---|---|
| | | and other problems. If this crusher comes, all our people will die soon at the age of 40 or 43. All those who have come here are not the people of this village. If this public hearing had been held in the village, they would have known what the people of that village were saying. The people do not know that this meeting is taking place. All those who have come are the parents of the people who work in that crusher. None of the villagers came, so I am protesting this crusher on behalf of my panchayat. If this is violated, we will hold a big protest. |
| 3 | Thiru Raja, Nelvaipalayam village. | Akkinampattu village and Nelvaipalayam village are the same village, so everyone has been talking about how our panchayat would benefit if the quarry on that side came here too. The quarry funds are going somewhere else, so we need this quarry because it would be beneficial if that income came to our panchayat |
| 4 | Thiru Subramanian, Resident from Nelvaipalayam village. | I am from Nelvaipalayam Panchayat, this quarry is going to be built next to the existing quarry. Many people will benefit from this, so we will not be affected. On behalf of the village, I request you to grant permission for this. Thank you and greetings. |
| 5 | Thiru. Kamalakkannan, Nelvaipalayam village | I am the Panchayat President of Aakinampattu village. If a quarry is established in this place, some job opportunities will be available, so we have no objection to the establishment of this quarry. We welcome this. |
| 6 | Thiru. Thenraj, Resident from Nelvaipalayam village | We welcome this quarry. Everyone will get employment opportunities. It will be beneficial for us if we get employed. |
| 7 | Thiru Jayaraman, Nelvaipalayam village | This quarry is going to be located next to our house, we don't have any problems with it, |

| | | |
|---|---|---|
| | | so we need this quarry. |
| 8 | Tmt.Rani, Aakinaampattu village | They all say they will get jobs, and we won't be affected, so we need this quarry. |
| 9 | Perumal, Nelvaipalayam village. | We will not have any problems with the arrival of this crusher, and people will also get employment opportunities. |
| 10 | Aarumugam, Nelvaipalayam village. | This quarry is located right next to our place, we have no problem with it. |
| 11 | Thiru Lauser, Resident from Nelvaipalayam village | We have no objection to the quarry coming up in Nelvaipalayam. The quarry should be operated. |

The public hearing meeting was concluded with thanks to the Revenue Divisional Officer, Madurantakam, Officials, Public and NGO's attended and also informed to the public that the proceedings (audio and video recording) of the meeting, written petitions along with the hard copy of the minutes of the meeting will be sent to the State Environment Impact Assessment Authority (SEIAA-TN), Chennai. The proponent has reported that the EIA will be revised on the query raised in this Public Hearing and will be submitted to the SEIAA-TN.

The list of participants, audio and video recording, representation received on stage during meeting in original with photographs of the public hearing meeting are enclosed herewith.

With this, the public consultation meeting concluded.

The following persons have furnished their views in written statements / letter (Copy enclosed)

| S.No. | Name | Address |
|---|---|---|
| 1. | Haritha Educational Rural Welfare Society | 11-131, Indira Nagar, Uravakonda – 515812, Anathapuramu Dist (A.P) |
| 2. | Thiru.Durga Prasad | Lepakshi Rural Development Society, H.No.03-369, Sri Vasavi Nagar Colony, Nandyal. |
| 3. | Uday Environmental Rural Development Society | 1-70, B.C. Colony, Brahmanapalle, Gooty, Ananthapur, Andhra Pradesh – 515401. |

**Other Enclosures:**

1) Copy of press release (Public Notice published in the daily News paper Tamil & English dated 29/10/2024)
2) Copy of Attendance sheet of the public hearing meeting along with photographs and DVD Disc recorded with the entire proceedings of public hearing.

**District Environmental Engineer,**
**Tamilnadu Pollution Control Board,**
**Maraimalai Nagar**

**Revenue Divisional Officer,**
**Madhurandhagam,**
**Chengalpattu District**

**தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்**

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அலுவலகம்
தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்
மறைமலைநகர்

**பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்ட நடவடிக்கைகள்**

செங்கல்பட்டு மாவட்டம், செய்யூர் வட்டம், நெல்வாய்பாளையம் கிராமம், புல எண். க.ச.எண்.88/1, 88/2 மற்றும் 88/4A பரப்பளவு 1.63.98 ஹெக்டேர் (சுரங்கப்பகுதி) & தொகுதி–II, க.ச.எண்.75/6, 75/7, 75/8, 75/9, 85/1, 2 பரப்பளவு 0.72.0 ஹெக்டேர் (சுரங்கத்திலிருந்து வெட்டி எடுக்கப்பட்ட கனிமத்தை சேமிப்பதற்காக அல்லது கழிவு பொருட்கள் கொட்டுவதற்காக அல்லது வாகனங்கள் நிறுத்துவதற்காக அல்லது சுரங்க அலுவலகம் அமைப்பதற்காக பயன்படுத்தப்படும்). திருK.சுந்தரமூர்த்தி சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரிக்கான சுற்றுச்சூழல் தாக்கம் குறித்த பொது மக்கள் கருத்துக் கேட்பு கூட்டம் 03/12/2024 அன்று காலை 11.00 மணி அளவில் தி/ள். ஜெயந்தி மஹால், S.H.49, கிழக்கு கடற்கரை சாலை, நெல்வாய்பாளையம் கிராமம், செய்யூர் வட்டம், செங்கல்பட்டு மாவட்டத்தில் நடைபெற்ற பொது மக்கள் கருத்து கேட்புக் கூட்ட நடவடிக்கை விவரங்கள்.

**திட்ட விவரங்கள்:**

| வ.எண். | முன்மொழியப்பட்ட குவாரியின் பெயர் மற்றும் இடம் | குவாரியின் அளவு (ஹெக்டர்) |
|---|---|---|
| 1. | திருK.சுந்தரமூர்த்தி சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரி தொகுதி –I க.ச.எண்.88/1, 88/2 மற்றும் 88/4A, (சுரங்கப்பகுதி). | 1.63.98 |
| 2 | தொகுதி–II, க.ச.எண்.75/6, 75/7, 75/8, 75/9, 85/1, 2 (சுரங்கத்திலிருந்து வெட்டி எடுக்கப்பட்ட கனிமத்தை சேமிப்பதற்காக அல்லது கழிவு பொருட்கள் கொட்டுவதற்காக அல்லது வாகனங்கள் நிறுத்துவதற்காக அல்லது சுரங்க அலுவலகம் அமைப்பதற்காக பயன்படுத்தப்படும்) | 0.72.0 |

இடம்; தி/ள். ஜெயந்தி மஹால், S.H.49, கிழக்கு கடற்கரை சாலை, நெல்வாய்பாளையம் கிராமம், செய்யூர் வட்டம், செங்கல்பட்டு மாவட்டம்.
நாள் மற்றும் நேரம்: 13/12/2024, காலை – 11.00 மணி

**பங்கேற்றோர்:**
**திருவாளர்கள்:**

| | | | |
|---|---|---|---|
| 1. | திருமதி.S.ரம்யா | : | வருவாய் கோட்டாட்சியர், மதுராந்தகம் |
| 2. | திரு. கோ. உதயகுமார் | : | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>மறைமலைநகர் |
| 3. | திரு.R.இளங்கோவன் | : | உதவி இயக்குனர், கனிம வளத்துறை |
| 4. | திரு.V.சரவணன் | : | வட்டாட்சியர் செய்யூர் |
| 5. | திரு.மணிவாசகன் | : | உதவி பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>மறைமலைநகர் |

| | | | |
|---|---|---|---|
| 6. | திரு.பாலாஜி | | உதவி பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>மறைமலைநகர் |
| 7. | திரு.சிவகுமார் | | உதவி பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>மறைமலைநகர் |
| 8. | பொது மக்கள் | : | 114 நபர்கள் (வருகை பதிவேட்டின் நகல் இணைக்கப்பட்டுள்ளது) |

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், மறைமலைநகர் அவர்கள், இக்கருத்து கேட்பு கூட்டத்திற்கு தலைமை ஏற்று நடத்த வருகை தந்துள்ள வருவாய் கோட்டாட்சியர் அவர்களையும் மற்றும் ஏனைய அரசுத்துறை அதிகாரிகள், பொதுமக்கள் மற்றும் தன்னார்வலர்கள் ஆகியோர் அனைவரையும் வரவேற்றார். செங்கல்பட்டு மாவட்டம், செய்யூர் வட்டம், நெல்வாய்பாளையம் கிராமம், புல எண். க.ச.எண்.88/1, 88/2 மற்றும் 88/4A பரப்பளவு 1.63.98 ஹெக்டேர் (சுரங்கப்பகுதி) & தொகுதி–II, க.ச.எண்.75/6, 75/7, 75/8, 75/9, 85/1, 2 பரப்பளவு 0.72.0 ஹெக்டேர் (சுரங்கத்திலிருந்து வெட்டி எடுக்கப்பட்ட கனிமத்தை சேமிப்பதற்காக அல்லது கழிவு பொருட்கள் கொட்டுவதற்காக அல்லது வாகனங்கள் நிறுத்துவதற்காக அல்லது சுரங்க அலுவலகம் அமைப்பதற்காக பயன்படுத்தப்படும்). திருK.சுந்தரமூர்த்தி சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரிக்கான சுற்றுச்சூழல் தாக்கம் குறித்த பொது மக்கள் கருத்துக் கேட்பு கூட்டம் நடத்த கேட்டுக்கொண்டதின் அடிப்படையில் அதற்கான அறிவிப்பு 29.10.2024 அன்று **"தினத்தந்தி"** என்கின்ற தமிழ் நாளிதழிலும் மற்றும் **"டெக்கான் குரோனிகல்"** என்ற ஆங்கில நாளிதழிலும் வெளியிடப்பட்டு இன்று 03.12.2024 இல் இப்பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்பதை எடுத்துரைத்தார்.

இதனையடுத்து இத்திட்டம் தொடர்பான விரிவான விளக்கங்கள் மற்றும் அதனை சார்ந்த சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு குறித்து இத்திட்ட ஆலோசகர் திரு.தங்கமணி, பொதுமக்களுக்கு எடுத்துரைத்தார்.

அதன் பின்பு மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்கள், பொதுமக்களிடம் இந்த திட்டத்தைப் பற்றி தங்களது கருத்துக்கள் கேள்விகள், விளக்கங்கள் ஏதும் தேவையிருப்பின் அமைதியான முறையில் தங்களது பெயரையும் ஊரையும் குறிப்பிட்டு தெரியப்படுத்தலாம் என குறிப்பிட்டார். மேலும் அவர் கூறுகையில் தாங்கள் கூறுகின்ற அனைத்து கருத்துக்களும் ஒலி மற்றும் ஒளி பதிவு செய்யப்படும் எனவும், எழுத்துப்பூர்வமாகவும் தங்களது கருத்துக்களை மனுவாகவும் கொடுக்கலாம் என கூறினார். இதை தொடர்ந்து கருத்துக் கேட்பு கூட்டத்தில் கலந்து கொண்ட பொதுமக்கள் தங்களது கருத்துக்களை பின்வருமாறு தெரிவித்தார்கள்.

**பொதுமக்களின் கருத்து மற்றும் கோரிக்கைகள்**

| வ.எண் | பெயர் மற்றும் முகவரி | கருத்து மற்றும் கோரிக்கைகள் |
|---|---|---|
| 1 | **திரு.ரெங்கநாதன்,<br>வேட்டைகாரன்குப்பம்<br>தலைவர்** | இந்த நெல்வாய்பாளையம் கிராமத்தில் அமையவிருக்கும் சுரங்கத்திற்கு கருத்து கேட்பு கூட்டத்திற்கு தலைமை ஏற்று இருக்கின்ற கோட்டாட்சியர் அவர்களுக்கும் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்களுக்கும் கனிமவள உதவி இயக்குனர் அவர்களுக்கும் வட்டாட்சியர் அவர்களுக்கும் மற்றும் கருத்து கேட்புக் கூட்டத்திற்கு வந்துள்ள கிராம மக்கள் அனைவருக்கும் முதற்கண் வணக்கத்தை தெரிவித்துக் கொண்டு நான் இங்கு ஒரு சில நிமிடங்கள் பேச விரும்புகின்றேன். |

| | | |
|---|---|---|
| | | நெல்வாய்பாளையம் ஊராட்சி ஒன்றிய தலைவர் மற்றும் நானும் இருவரும் கேட்டுக்கொண்டதன் பேரில் திரு.K.சுந்தரமூர்த்தி அவர்கள் நெல்வாய்பாளையம் கிராமத்தில் இந்த சுரங்கத்தை அமைக்க முன் வந்தார். அவருக்கு ஆக்கினாம்பட்டு கிராமத்தில் வேலை இருக்கிறது, இருந்தாலும் நெல்வாய்பாளையத்திற்கு வருமானம் வர வேண்டும் என்ற ஒரே காரணத்திற்காக இந்த சுரங்கத்தை அவர் அமைக்க ஒப்புக்கொண்டதன் பேரில் இன்று கருத்துக் கேட்புக் கூட்டம் நடைபெறுகிறது. அவருக்கு என் முதற்கண் வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன். நெல்வாய்பாளையம் ஊராட்சி தலைவர் வரவில்லை அவருக்கு உடல்நிலை சரியில்லை. இந்த சுரங்கம் அமைவதால் அந்த சீனியரேஜ் நிதி 75 சதவீதம் ஊராட்சிக்கு வரும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் வேலை வாய்ப்பு மற்றும் பள்ளிக்கூடத்திற்கு தேவையான வசதிகளை அனைத்தும் குவாரி நிதியில் செய்து கொடுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. அதேபோன்று கிராமத்திற்கு ஏற்கனவே அவர் நிறைய செய்துள்ளார் இன்னும் செய்வார். இந்த சுரங்கங்கள் வருவதால் நேரடியாகவும் மறைமுகமாகவும் வேலை வாய்ப்பு கிடைக்கிறது இதேபோல மேலும் மேலும் பல சுரங்கங்கள் வந்து செய்யூர் தாலுக்கா நல்ல முன்னேற்றம் அடைய வேண்டும் என்று கேட்டுக் கொண்டு விடைபெறுகிறேன் நன்றி வணக்கம். |
| 2 | **பாண்டுரங்கன்,<br>நெல்வாய்பாளையம் ஊராட்சி** | அய்யா சொன்னார்கள் இந்த கிரஷ்ஷர் வந்தால் மக்கள் எல்லாரும் நல்லா இருப்பாங்க என்று ஆனால் கிரஷ்ஷர் வந்தால் எல்லாரும் செத்து தான் போவார்கள் ஏற்கனவே பாளையத்தை சுற்றி மூன்று கிரஷ்ஷர் இருக்கிறது S.S.கிரஷ்ஷர் இருக்கிறது. அவர்கள் வெடிக்கும் வெடி குறைந்த பட்சம் 1 1/2 கிலோ மீட்டர் தூரம் வருகிறது அந்த புகையின் தாக்கம் வருகிறது ஏற்கனவே மக்கள் எல்லோரும் வீசிங் பிரச்சினை மற்றம் மற்ற பிரச்சனையாலும் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். இன்னொன்னு கிரஷ்ஷர் வந்தால் நம்ம ஜனங்கள் எல்லாரும் சீக்கிரம் 40 வயசுல 43 வயசுல செத்துப் போவார்கள். இங்கு வந்து இருக்கிறவங்க எல்லாரும் இந்த ஊர் மக்கள் இல்லை. இந்த கருத்துக் கேட்புக் கூட்டம் ஊர்ல வெச்சிருந்தா அந்த ஊர் மக்கள் என்ன சொல்கிறார்கள் என்பது தெரிந்திருக்கும். இந்த கூட்டம் நடப்பது மக்களுக்கு தெரியாது வந்திருப்பவர்கள் எல்லாரும் அந்த கிரஷ்ஷரில் வேலை செய்கின்றவர்களுடைய ஆட்களின் |

| | | |
|---|---|---|
| | | பெற்றோர்கள். அந்த கிராம மக்களை யாரு வரவில்லை அதனால் இந்த கிரஷ்ஷரை என் ஊராட்சி சார்பாக நான் எதிர்ப்பு தெரிவிக்கிறேன் இதை மீறி வந்தால் நாங்கள் பெரிய போராட்டம் நடத்துவோம் |
| 3 | ராஜா,<br>நெல்வாய்பாளையம் ஊராட்சி. | ஆக்கினாம்பட்டு கிராமத்துக்கும் நெல்வாய்பாளையம் கிராமத்திற்கும் ஊர் ஒன்றுதான் அந்த பக்கம் இருக்கின்ற குவாரி இங்கேயும் வந்தா எங்க பஞ்சாயத்து நல்லா இருக்குமே என்று எல்லாரும் கலந்து பேசி இருக்கிறார்கள். அந்த குவாரி நிதி எங்கெங்கேயோ போகுது அந்த வருமானம் எங்க பஞ்சாயத்துக்கு வந்தால் நன்மை என்பதால் இந்த குவாரி வேணும் |
| 4 | திரு.சுப்பிரமணி,<br>நெல்வாய்பாளையம்<br>ஊராட்சியை சேர்ந்தவர் | நான் நெல்வாய்பாளையம் ஊராட்சியை சேர்ந்தவன், இந்த குவாரி ஏற்கனவே நடைபெற்று கொண்டிருக்கின்ற குவாரிக்கு பக்கத்திலேயே குவாரி செய்யப் போகிறார்கள். இதனால் பல பேர் பலனடைவார்கள் அதனால் எங்களுக்கு எந்த பாதிப்பும் இல்லை. இதற்கு அனுமதி தருமாறு ஊர் சார்பாக நான் கேட்டுக்கொள்கிறேன். நன்றி வணக்கம் |
| 5 | கமலக்கண்ணன்,<br>நெல்வாய்பாளையம் ஊராட்சி<br>மன்ற தலைவர் | ஆக்கினாம்பட்டு கிராமத்தின் ஊராட்சி தலைவராக இருக்கின்றேன். இந்த இடத்தில் குவாரி அமைத்தால் சில வேலை வாய்ப்புகள் கிடைக்கிறது அதனால் இந்த குவாரி அமைவதில் எங்களுக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை. இதை வரவேற்கின்றோம் |
| 6 | திரு.தேன்ராஜ்,<br>நெல்வாய்பாளையம்<br>ஊராட்சியை சேர்ந்தவர் | இந்த குவாரி வருவது வரவேற்கத்தக்கது. எல்லோருக்கும் வேலை வாய்ப்பு கிடைக்கும். வேலைவாய்ப்பு கிடைத்தால் எங்களுக்கு பயனுள்ளதாக இருக்கும் |
| 7 | ஜெயராமன்,<br>நெல்வாய்பாளையம் ஊராட்சி | இந்த குவாரி எடுக்கப்போவது எங்கள் வீட்டிற்கு பக்கத்தில் தான் எங்களுக்கு எந்த வித இடையூறும் இல்லை அதனால் குவாரி வேண்டும் |
| 8 | ராணி,<br>ஆக்கினாம்பட்டு கிராமம் | இவங்க எல்லாரும் வேலை கிடைக்கும் என்கிறார்கள் எங்களுக்கும் எந்த பாதிப்பும் இல்லை, அதனால் இந்த குவாரி வேண்டும் |
| 9 | பெருமாள்,<br>நெல்வாய்பாளையம் ஊராட்சி | இந்த கிரஷ்ஷர் வருவதால் எங்களுக்கு எந்த பிரச்சனையும் இல்லை மக்களுக்கும் வேலை வாய்ப்பு கிடைக்கும். |
| 10 | ஆறுமுகம்,<br>நெல்வாய்பாளையம் ஊராட்சி | இந்த குவாரி எடுக்கப்போவது எங்கள் இடத்திற்கு பக்கத்தில் தான் எங்களுக்கு எந்த பிரச்சனையும் இல்லை. |
| 11 | திரு.லாசர்,<br>நெல்வாய்பாளையம்<br>ஊராட்சியை சேர்ந்தவர் | நெல்வாய்பாளையத்தில் வருகின்ற குவாரிக்கு எங்களுக்கு எந்த வித ஆட்சேபனையும் இல்லை குவாரி நடத்தலாம். |

இதையடுத்து பொதுமக்கள் எவரும் கருத்துக்கள் கூற முன்வராத பட்சத்தில் இப்பொதுமக்களின் கருத்து கேட்பு கூட்டத்தை முடிவுக்கு கொண்டுவரும் விதமாக மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்கள் கூட்டத்திற்கு தலைமை ஏற்று நடத்தி தந்த மதுராந்தகம் வருவாய் கோட்டாட்சியர் அவர்களுக்கும், ஏனைய அரசுதுறை அலுவலர்கள், பொதுமக்கள் மற்றும் சமுக ஆர்வலர்கள் அனைவருக்கும் நன்றியினை தெரிவித்துக் கொண்டு இந்த கருத்து கேட்பு கூட்டத்தில் பொதுமக்கள் பதிவு செய்த கருத்துக்கள் முழுமையாக ஒலி மற்றும் ஒளி பதிவு செய்யப்பட்டு மாநில சுற்றுச்சூழல், தாக்க மப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்பப்படும் என்று கூறி கருத்துக் கேட்பு கூட்டத்தை நிறைவு செய்தார்.

இப்பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தில் கலந்து கொண்ட பொதுமக்களின் பட்டியல் மற்றும் கோரிக்கையாக பெறப்பட்ட புகார் மனுக்கள் இத்துடன் இணைப்பாக இணைக்கப்பட்டுள்ளது.

மேலும் கீழ்க்கண்ட கடிதங்கள் கூட்டத்தின்போது நேரடியாக மக்களால் கொடுக்கப்பட்டது. கீழ்க்கண்ட நபர்கள் / அமைப்புகள் தங்கள் கடிதங்களை அளித்தன (நகல் இணைக்கப்பட்டுள்ளது).

| வ. எண். | பெயர் | முகவரி |
|---|---|---|
| 1. | ஹரிதா கல்வி கிராமப்புற நலன்புரி சங்கம் | 11–131, இந்திரா நகர், உரவகொண்டா – 515812, அனந்தபூர் மாவட்டம் (A.P) |
| 2. | திரு.துர்கா பிரசாத் | லேபக்ஷி ரூரல் டெவலப்மென்ட் சொசைட்டி, ஹெச்.எண்.03–369, ஸ்ரீ வாசவி நகர் காலனி, நந்தியால். |
| 3. | உதய் சுற்றுச்சூழல் ஊரக வளர்ச்சி சங்கம் | 1–70, பி.சி.காலனி, பிராமணப்பள்ளி, கூடி, அனந்தபூர், ஆந்திரப் பிரதேசம் – 515401. |

இதர இணைப்புகள்.

1. பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம் பற்றி 29/10/2024–ஆம் நாளிட்ட தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழ்களில் வெளிவந்த அறிவிப்பின் நகல்
2. வருகை பதிவேட்டின் நகல், புகைப்படங்கள் மற்றும் நிகழ்ச்சி பதிவு செய்யப்பட்ட டிவிடி தட்டுகள்.

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்
தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,
செங்கல்பட்டு மாவட்டம்.

வருவாய் கோட்டாட்சியர்
மதுராந்தகம்,
செங்கல்பட்டு மாவட்டம்.